# பாடம் 16: தாவீதின் அரசு
# (ஓர் அரசுடனான உடன்படிக்கை)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**
அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 15 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 15 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 18 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், கடவுள் எப்படி இஸ்ரயேல் மக்களை பாலும் தேனும் பொழிகின்ற வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் கொணர்ந்தார் என்பதை நாம் கற்றோம். இந்த பாடத்தில், அவர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைந்து குடியமர்ந்தப் பிறகு என்ன நிகழ்ந்தது என்பதைப் பற்றி நாம் கற்போம். இஸ்ரயேலரை நடத்துவதிலும் பராமரிப்பதிலும் கடவுள் நம்பகமாக இருந்தாலும், அவர்கள் தொடர்ந்து அவருக்கு நம்பகமற்றவர்களாக இருந்தனர் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

**தற்போதைய பாடம்:**
1. இஸ்ரயேலரை மோசே எகிப்தில் இருந்து வெளியே நடத்தி வந்தப் பிறகு, அவர்களை யோசுவா வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நடத்திச் சென்றார். யோசுவா மற்றும் அவரது தலைமுறையினர் இறந்ததும், கடவுளைப் பற்றிய இஸ்ரயேலரின் அறிவும் அவ்வாறே ஆனது (நீதித்தலைவர்கள் 2:10). அவர்கள் மற்றத் தெய்வங்களை வழிபடத் தொடங்கினர். ஆகவே ஆண்டவர் இஸ்ரயேலரை அவர்களது எதிரிகளிடம் ஒப்படைத்து, அவர்கள் தங்களின் முன்னோரைப் போன்று தமது வழிகளில் நடக்கின்றனரா என்பதைக் காணச் சுற்றியுள்ள நாடுகளை அவர்களைச் சோதிக்கப் பயன்படுத்தினார் (நீத 2:22).

2. யோசுவாவும் அவரது தலைமுறைத் தலைவர்களும் இல்லாததால், இஸ்ரயேலர் பாவம் நிறைந்த வாழ்வு நடத்திக் கொண்டிருந்தனர், நாட்டை நடத்த கடவுள் நீதித்தலைவர்களை (குலத் தலைவர்களைப் போன்றோர்) நியமித்தார். இஸ்ரயேலரை அவர்களது எதிரிகளிடம் இருந்து காப்பாற்றவும், அவர்களைத் தம்மிடம் திரும்பச் செய்யவும் கடவுள் இந்த நீதித் தலைவர்களைப் பயன்படுத்தினார் (நீத 2:16). ஒத்னியேல், ஏகூது, சம்கார், தெபோரா, கிதியோன், தோலா, யாயிர், இப்தா, இப்சான், ஏலோன், அப்தோன், மற்றும் சிம்சோன் ஆகிய பன்னிருவரும் நீதித்தலைவர்கள் ஆவர். பிரச்சனை என்னவெனில், ஒரு நீதித்தலைவர் இறந்த ஒவ்வொரு முறையும், இஸ்ரயேல் இஸ்ரயேலர் மீண்டும் பாவம் நிறைந்த நடைமுறைகளுக்கும் சிலை வழிபாட்டுக்கும் திரும்பி, அழிவை நோக்கிச் சென்றனர். பாவம் மற்றும் விடுவிப்பின் நிலையான சுழற்சியாக அது இருந்தது. இஸ்ரயேலர் கிளர்ந்தெழுந்தனர், பின்னர் கடவுள் அவர்களைத் தண்டித்தார், பின்னர் இஸ்ரயேலர் மனந்திருந்தினர், அதன் பின்னர் கடவுள் அவர்களைத் துன்பத்தில் இருந்து விடுவித்தார். அதன் பிறகு இந்தச் சுழற்சி தொடர்ந்தது.

3. நீதித்தலைவர்கள் காலத்தின் இறுதியில், சாமுவேல் என்ற ஒரு சிறுவன் (அன்னா மற்றும் எல்கானாவின் மகனாகப்) பிறந்தான். சீலோவில் இருந்த ஏலி என்ற குரு அவனை ஆண்டவருக்கு அர்ப்பணித்தார், அங்கே அவன் ஏலியோடு தங்கி ஆண்டவருக்கு ஊழியம் செய்வதில் உதவியாக இருந்தான். சாமுவேல் சிறுவனாக இருந்தபோதே, கடவுள் அவனைத் தேர்ந்து கொண்டார், அதனால் அவர் ஒரு குருவாகவும் இறைவாக்கினராகவும் வளர்ந்தார் (1 சாமுவேல் 3, 7:9-10). சாமுவேல் தமது வாழ்நாள் முழுவதும் இஸ்ரயேலில் தலைவராகத் திகழ்ந்தார். சில நேரங்களில் இஸ்ரயேலின் இறுதி நீதித்தலைவராக அவர் அறியப்பட்டாலும், அவர் மெய்யாக நீதித்தலைவர் ஆகவில்லை. ஏனெனில், சிம்சோனுக்குப் பிறகு இஸ்ரயேலர் வேறு நீதித்தலைவரை விரும்பவில்லை, அவர்கள் ஒரு மனித அரசரையே விரும்பினர்.

4. இஸ்ரயேலரோடு கடவுள் ஏற்படுத்திய உடன்படிக்கையின் கீழ், இஸ்ரயேலர் ஒரு மனித அரசரைக் கொண்டிருப்பது கடவுளுக்கு ஏற்றதன்று. எனினும், இஸ்ரயேலர் சாமுவேலை நீதித்தலைவராக ஏற்க மறுத்து ஓர் அரசரை வேண்டினர். தங்களின் இறை அரசராக கடவுள் எப்படி தங்களைப் பாதுகாத்து பராமரித்து வந்தார் என்பதைப் பாராட்டாமல், மற்ற நாடுகளைப் போல் இருக்க விரும்பினர். கடவுள் தங்களுக்கு ஓர் மனித அரசரை ஏற்படுத்த வேண்டுமென கோரினர். மக்களின் கோரிக்கைக்கு சாமுவேல் இசைவளிக்க ஆண்டவர் கூறினார், ஆனால் மனித அரசன் அவர்களுக்கு என்ன செய்வான் எனவும் எச்சரிக்கச் செய்தார் (1சாமு 8:6-22). அது இஸ்ரயேலரின் அடுத்தக்கட்ட வீழ்ச்சியின் தொடக்கமாக இருந்தது.

5. அதன் பிறகு, சவுலின் காலம் (கி.மு. 1030-1010) முதல் செதேக்கியா ஆட்சி (கி.மு. 597-587) வரை முற்கால இஸ்ரயேல் மனித அரசர்களால் ஆளப்பட்டது. கடவுளுக்கு நம்பகமாக இருந்த சில அரசர்கள் வலிமையான ஆட்சியாளர்களாக இருந்தனர். ஆனால் மற்ற அரசர்கள் கடவுளை வழிபடுவதில் இருந்து மக்களை வெளியே நடத்தினர், இஸ்ரயேலின் எதிரிகளுடன் மோசமான ஒப்பந்தங்களைச் செய்தனர், மேலும் மக்களைக் கொடூரமாக நடத்தினர்.

6. இஸ்ரயேலின் முதல் அரசருக்கானத் தெரிவாக சவுலை சாமுவேல் திருப்பொழிவு செய்தார் (1சாமு 11:15). சவுல் இருபது ஆண்டுகள் அளவாக ஆட்சி புரிந்தார், இஸ்ரயேலின் எதிரிகள் சிலரைத் தோற்கடிக்கவும், குலங்களை ஒருங்கே கொணரவும் பலவற்றைச் செய்தார். ஆனால் சவுல் கலக்கமுற்ற ஒரு மனிதராகவும், கடவுளுக்கு நம்பகமின்றியும் இருந்தார். படைகளால் வெற்றிகள் பெற்றாலும், சவுல் திரும்பத்திரும்ப கடவுளுக்கு கீழ்ப்படியாமல் இருந்தார்.

7. சாமுவேல், கடவுளின் இறைவாக்கினராக, சவுலுக்கு எதிராகத் திரும்பி, ஈசாயின் இளைய மகனான ஆடுமேய்த்தச் சிறுவன் தாவீதை ஆதரித்தார் (1சாமு 15:10-35, 16:1-13). கலக்கமுற்ற அரசரை ஆற்றுப்படுத்த யாழ் மீட்டும் சிறப்பு பணியாளனாக தாவீது விரைவில் சவுலின் அரசவைக்குள் நுழைந்தான் (1சாமு 16:14-23).

8. தாவீதின் மீது சந்தேகமுற்ற சவுல், அவர் போரில் பெற்ற வெற்றிகளால் பொறாமையும் கொண்டார். சாமுவேல் ரகசியமாக தாவீதை இஸ்ரயேலின் புதிய அரசராகத் திருப்பொழிவு செய்தார் (1சாமு 16:12-13), சவுல் இறந்தவுடன் தாவீது அரசரானார். பெலிஸ்தியருக்கு எதிரானப் போரில் காயமுற்றதும் சவுல் தற்கொலை செய்து கொண்டார் (1சாமு 31:1-13).

9. தாவீது அடுத்த அரசரானார். அவர் கடவுளோடு நெருக்கமான உறவுநிலை கொண்டிருந்த ஒரு மாதிரி அரசராக இருந்தார். பல விதங்களில், கடவுளின் மக்களுக்கானப் புதிய வாழ்வு மற்றும் இவ்வுலகில் கடவுளின் ஆட்சிக்கும் ஓர் அடையாளமாக அவர் மாறினார் (2 சாமுவேல் 23:5; திருப்பாடல் 89:3-4; எசாயா 9:1-7; எரேமியா 33:14-26; மீக்கா 5:2-5). எனினும், தாவீதும் தீவிரமான குற்றங்களில் ஈடுபட்டார். அவர் தமது படை அலுவலர்களில் சிறந்த ஒருவரான, இத்தியன் உரியாவின் மனைவி பத்சேபாவுடன் விபச்சாரக் குற்றம் செய்தார் (2சாமு 23:24-39). அதனோடு, தமது குற்றங்களை மறைக்க, போரில் உரியாவைப் பாதுகாப்பற்ற நிலையில் முன்வரிசையில் நிறுத்திக் கொல்லப்படச் செய்தார். அதனால் விபச்சாரத்தோடு, கொலைக் குற்றமும் தாவீது செய்துள்ளார்.

10. கடவுளுக்கு ஒரு பெரிய கோவிலை, தம் அரண்மனையை விடப் பெரிதாகக் கட்டியெழுப்ப தாவீது விரும்பினார். ஆனால் தாவீது அதிக மக்களின் இரத்தத்தைச் சிந்தியதால் கடவுள் அதைத் தடுத்தார். பதிலாக, அவரது மகன் சாலமோன் அந்தக் கோவிலைக் கட்டுவார் என்று தாவீதுக்கு கடவுள் வாக்களித்தார். கடவுள் தாவீதுடன் ஓர் உடன்படிக்கையையும் ஏற்படுத்தி, இஸ்ரயேலின் அரியணையின் வாரிசுகளாக அவரது வழிமரபினரே இருப்பர் என வாக்களித்தார். மற்ற வார்த்தைகளில், தாவீதின் அரியணை என்றென்றும் நிலைத்திருக்கும் (2சாமு 7:1-17).

11. தாவீதை அடுத்து, அவரது மகன் சாலமோன் இஸ்ரயேலின் அரசரானார். தாவீது முதலில் விபச்சாரம் செய்து, கணவர் உரியா போரில் இறந்தப் பிறகு தமது மனைவியாக ஏற்றுக் கொண்ட பெண்ணான பத்சேபாவின் மகனே சாலமோன்.

12. சாலமோன் எருசலேமில் மோரியா மலை மீது பெரிய கோவிலைக் கட்டியெழுப்ப ஏழு ஆண்டுகளைச் செலவிட்டார் (1 அரசர்கள் 6). கடவுள் அவருக்கு அளவிட இயலாத ஞானத்தால் ஆசி வழங்கினார். எனினும், தமது தந்தையைப் போன்றே, அவர் பெண்கள் விடயத்தில் பலவீனமாக இருந்தார், அவரது இச்சை அவரது தந்தையை மிகவும் விஞ்சியது. அவர் தமக்காக 700 மனைவியரையும், 300 வைப்பாட்டியரையும் வைத்திருந்தார், அவர்களில் பெரும்பாலானோர் மற்றத் தெய்வங்களை வழிபடும் வெளிநாட்டுப் பெண்களாக இருந்தனர். அவர்களது தெய்வங்களுக்கு திருத்தலங்களும் நினைவுச்சின்னங்களும் எழுப்பியதன் வழியாக, அவர்களின் சிலை வழிபாட்டு நடைமுறைகளை தமது நாட்டில் சாலமோன் அனுமதித்தார். இறுதியாக, சாலமோன் தாமே பிறசமயச் சடங்குகளில் ஈடுபட்டார்.

13. சாலமோன் இறந்த பொழுது, அவரது மகன் ரெகபெயாம் அரசரானார். தங்கள் சுமைகளை குறைக்குமாறு இஸ்ரயேலின் குலங்கள் விடுத்தக் கோரிக்கையை ரெகபெயாம் நிராகரித்தான். அதன் விளைவாக, ஒரு பெரும் புரட்சி நடைபெற்றது. பன்னிரண்டில் பத்து குலங்கள், எரொபவாம் தலைமையில் அந்நாட்டில் இருந்து தங்களைப் பிரித்துக்கொண்டு வடக்கு அரசை

நிறுவினர். ரெகபெயாமின் கீழ் தெற்கில் இருந்த யூதா, பென்யமின் என்னும் இரு சிறிய குலங்கள் மட்டும் எஞ்சின.

14. வடக்கு அரசின் பிளவு, தாவீதின் வாரிசுகளே என்றென்றும் இஸ்ரயேலின் அரசர்களாக இருப்பர் என்ற தாவீதுடனான கடவுளின் உடன்படிக்கையில் இருந்து இஸ்ரயேல் தங்களை விலக்கிக் கொண்டதைக் காட்டுகிறது. உண்மையில், தற்போது, இஸ்ரயேல் முழுவதுமே பிறசமயச் சடங்குகளால் நிறைந்திருந்தது.

15. கடவுள் தமது மக்களிடம் பேச, அவர்கள் உடன்படிக்கையை மீறியதற்கு எதிராகவும், அவர்களின் மனந்திருந்தலை வலியுறுத்தியும் பேசுவதற்காக இறைவாக்கினர்களை எழுப்பினார். எஞ்சிய விசுவாசிகளின் எதிர்நோக்கை வலுப்படுத்தும் பொறுப்பு இறைவாக்கினர்களிடம் இருந்தது.

16. இஸ்ரயேலர் தொடர்ந்து செய்தப் பாவங்களில் ஒன்று சிலைவழிபாடு. சிலைவழிபாடு என்பது நமது வாழ்வில் கடவுளின் இடத்திற்கு மேலாக யாரொருவரையோ யாதொன்றையோ வைப்பதாகும், படைப்பாளரை விடவும் அந்த நபர் அல்லது பொருளை முக்கியமாகக் கருதுவதாகும்.

17. நமது நாளிலும் காலத்திலும், நாம் மற்றத் தெய்வங்களை வழிபடும் குற்றத்தைச் செய்வதில்லை. எனினும், நமது வாழ்வில் கடவுளை விட உயர்நிலை அல்லது முன்னுரிமை பெறும் மற்ற ஆபத்துகளின் சாத்தியம் நம்மைச் சூழ்ந்துள்ளது. இந்த மற்றப் பொருட்கள் நமது வாழ்வில் கடவுளின் இடத்தை எடுத்துக்கொள்கிற பொழுது, அவை நமது கவனம் மற்றும் ஆராதனையைப் பெறுகின்றன.

*கதிம 2113:* “சிலைவழிபாடு என்பது தவறான பிறசமய வழிபாட்டை மட்டும் குறிப்பதன்று. இது தொடர்ந்து விசுவாசத்திற்கு நிலையான சோதனையாக இருக்கிறது. சிலைவழிபாடு என்பது கடவுளாக ஒன்றுக்கு இறைத்தன்மை கொடுப்பதில் அடங்கியுள்ளது. கடவுளின் இடத்தில் படைப்புயிர்களை வைத்து மரியாதை செலுத்தும் பொழுதெல்லாம் மனிதர் சிலைவழிபாடு செய்கின்றனர், அது தெய்வங்களாக அல்லது அலகைகளாக (எடுத்துக்காட்டாக, சாத்தானியம்), அதிகாரம், இன்பம், இனம், மூதாதையர், தகுதிநிலை, பணம், இன்னும் பல. கடவுளே தனித்துவமான ஆண்டவர் என்பதை சிலைவழிபாடு நிராகரிக்கிறது; அது கடவுளுடனான ஒன்றிப்புக்கு ஒவ்வாததாக இருக்கிறது.”

18. நாம் வாழும் நவீன காலங்களில் கருத்தியல்கள் கூட சிலைகளாக முடியும். இந்த உலகுசார் பார்வைகள் அல்லது தத்துவங்கள் கடவுளின் அறநெறிக் கொள்கைகள் மற்றும் இயற்கையின் விதிகளுக்கு முரணாக இருக்கின்றன. நமது காலத்தின் இந்தச் சிலைகளில் சிலவற்றின் தாக்கத்துக்கு அறியாமல் ஆட்பட்டிருந்தால் நாம் அதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இன்று மிகப் புகழ்பெற்றுள்ளக் கருத்தியல்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள்:

*பருப்பொருள்வாதம்:* நம்மை மகிழ்விக்கும் வல்லமை கொண்டுள்ளதால் பருப்பொருள் சார்ந்த உடைமைகளைத் தேடியடைவது தகுதியானது என்ற மனநிலை. இது தாங்கள் விரும்புகிற பொருள் அனைத்தையும் கொண்டிருந்தால் மட்டுமே மகிழ்ச்சி கிடைக்கும் என்ற சிந்தனையால் மக்களை ஏமாற்றுகிறது. இன்னும், ஏராளமானப் பொருட்களை அனுபவிக்கும் மக்கள் பலரும் தொடர்ந்து துயரத்திலேயே இருக்கின்றனர்.

*பாலியல் விடுதலை:* நமது சொந்தப் பாலியல் மற்றும் பாலினத்தைத் தீர்மானிக்கும் உரிமை மற்றும் அதிகாரத்தை நாம் கொண்டுள்ளோம் என்றக் கருத்தியல். இது பாலினச் சமத்துவம் மற்றும் உரிமைகளை ஆதரித்தல், இன்னும், படைப்பாளரான கடவுளுக்கு தாம் படைத்தோரின் பாலினம் மற்றும் பாலினநிலையைத் தீர்மானிக்கும் உரிமை இல்லை என்ற சிந்தனையால் மக்களை ஏமாற்றுகிறது.

*சமயச் சமத்துவம்:* எல்லா சமயங்களும் சமமான உண்மை கொண்டவை என்ற நம்பிக்கை. பல தெய்வங்களில் இயேசுவும் ஒருவர், மேலும் அவரை வழிபடுவதைப் போன்றே மற்றத் தெய்வங்களும் வழிபாட்டுக்கு உரிமை உடையவை, ஏனெனில் எல்லா சமயங்களுமே விண்ணகத்தை அடைவதற்கான வெவ்வேறு பாதைகள். பிரச்சனை என்னவெனில், ஒரே இலக்கிற்கான வெவ்வேறு பாதைகளான இந்த சமயங்கள் முரண்பாடான நம்பிக்கைகள் மற்றும் படிப்பினைகளைக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

*நவீனத்துவம்:* ஒவ்வொரு தலைமுறை மக்களின் மாறுகின்ற மனநிலையை கத்தோலிக்கத் திருச்சபையும் தழுவ வேண்டும் என்று உணர்கின்ற நவீனக் கருத்துகளின் மீதான அதீத அன்பு அல்லது அறிவற்ற மோகம்.

*சார்பியல்வாதம்:* அறுதியான உண்மை என்று எதுவுமில்லை, தனிப்பட்ட அனுபவம் அல்லது நமது விருப்பத்தின் அடிப்படையில் எது உண்மை என்பதை நாம் தேர்வு செய்யலாம் என்ற தத்துவம். ஒருவருக்கு உண்மையாக இருப்பது மற்றொருவருக்கு உண்மையாக இருக்காது, ஏனெனில் உண்மைக்கான புறநிலை அளவீடு எதுவுமில்லை என்று அது கூறுகிறது.